# கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யர்

(அமரர்) மகாராஜபுரம்
விசுவநாதய்யர்

சென்ற நூற்றாண்டை "கர்நாடக ஸங்கீதத்தின் பொற்காலம்" என்றே சொல்ல வேண்டும். ஏனெனில், நமது சங்கீதத்தின் திரிமூர்த்திகளாகிய மகான்கள் தியாகய்யா, தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் தங்கள் ஒப்பற்ற ஸாஹித்யங்களை இயற்றி சங்கீத உலகிற்கு அளித்தது சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயேயாகும். இவர்களுடைய சிஷ்ய பரம்பரைகளில் பல மகாவித்வான்கள் தோன்றி நமது ஸங்கீதத்தை மிக உன்னதமான நிலைக்குக் கொண்டு வந்தார்கள். இவர்களுள் சிலர் இந்நூற்றாண்டின் முதல் இருபது வருஷங்கள் வரை நம்மிடையே வாழ்ந்து வந்தனராதலால் அவர்களுடைய ஸங்கீதத்தைக் கேட்டு அனுபவிக்கும் பாக்கியம் என் போன்ற பலருக்குக் கிடைத்தது.

தமிழ் நாட்டில் ஸங்கீதக் கலையை முறையாகப் பயின்று, கர்நாடக ஸங்கீதத்தினால் விளையும் இன்பத்தை யாவரும் நுகரும் வண்ணம் செய்த வித்வான்களுக்குள் சமீபகாலதில் மிகவும் சிறந்து விளங்கிய கோனேரிராஜபுரம் வைத்திய நாதய்யர் ஒருவராவர்.

இவரது இசையின் இனிமையை நேரில் அனுபவித்து உணர்ந்து இன்புற்றவர்களில் சிலர் இக்காலத்திலும் இருக்கிறார்கள். இவருடன் சம காலத்திலேயே மிகவும் பிரபலமாக விளங்கிய பூச்சி ஸ்ரீனிவாஸ அய்யங்கார், மதுரை புஷ்பவனம் அய்யர் முதலியவர்களும் சிறந்த வித்வான்களே எனினும் வைத்திய நாதய்யரின் பாணியே இன்னும் பலருடைய மனத்தில் பதிந்து நிற்கிறது.

வைத்தியநாதய்யர், தஞ்சாவூர் ஜில்லாவில் மாயவரத்துக்கு சமீபத்தில் உள்ள மரத்துறை என்ற கிராமத்தில் பிறந்தவர். ஆகவே இவரை மரத்துறை வைத்தியநாதய்யர் என்றும் சிலர் குறிப்பிடுவதுண்டு. இவர் தந்தையாரின் பெயர் நாராயணஸ்வாமி அய்யர். இவர் சங்கீதத்தில் விசேஷமாக பயிற்சி பெறவில்லையெனினும் பஜனை பாட்டுகள் முதலியவற்றை நன்கு அறிந்திருந்ததாகத் தெரிகிறது. வைத்தியநாதய்யருக்குச் சுமார் பன்னிரெண்டு வயது நடந்து கொண்டிருந்த பொழுது அவருடைய தந்தையார் அவருக்குச் சங்கீதம் கற்பிக்க எண்ணி முதன் முதலாக, பந்தநல்லூர் நாட்டியாசிரியர் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் அனுப்பியதாகக் கேள்வியுற்றிருக்கிறேன். வைத்திய நாதய்யர் பிள்ளையவர்களிடம் சில காலம் ஸங்கீதம் பயின்ற பிறகு தந்தையார் குடும்பத்துடன் கோனேரிராஜபுரம் என்ற கிராமத்திற்குச் சென்று வசிக்கலாயினர். அங்கு பிரபல நாதஸ்வர வித்வானாகிய வைத்திய லிங்கம் பிள்ளை என்பவரிடம் வைத்திய நாதய்யர் சங்கீதம் பயிலத் தொடங்கினார். சில காலம் இவ்வாறு கற்ற பிறகு, மஞ்சக்குடி தேவ ராஜய்யர் என்ற ஸங்கீத ரஸிகர் வைத்திய நாதய்யரிடம் அன்பு பூண்டு, லய விஷயத்தில் அவருடைய ஞானத்தை விருத்தி செய்யும் பொருட்டு, அவரைப் புதுக்கோட்டை மான் பூண்டியா பிள்ளையிடம் அழைத்துச் சென்றார். அச்சமயம் அவரிடம் பிற்காலத்தில் மிகவும் புகழுடன் விளங்கிய தக்ஷிணாமூர்த்தி பிள்ளை குருகுலவாசம் செய்து வந்தார். மான்பூண்டியா பிள்ளையிடம் வைத்தியநாதய்யர் சங்கீதப் பயிற்சிக்கு அனுகுணமான லய நுணுக்கங்கள் பலவற்றை நன்றாகத் தெரிந்து கொண்டார். அபார தாள ஞானத்துடன் விளங்கிய வித்வானாகிய மான்பூண்டியா பிள்ளை அவர்கள், தம்மிடம் சிறப்பாகப் பயிற்சி பெற்று தம்முடைய பெயரைப் பிற்காலத்தில் விளங்கச் செய்யும் சிஷ்யர் ஒருவர் கிடைப்பாரா என்று ஏங்கிக் கொண்டிருந்த சமயம் வைத்தியநாதய்யர் அவரிடம் சென்றதாக அக்காலத்தில் சொல்லிக் கொள்வார்கள். வைத்தியநாதய்யர் தாள சம்பந்தமான விஷயங்களை நன்கு கற்றுத் தம் சங்கீதத்தை விருத்தி செய்து கொண்டதுடன், குருவுடன் சேர்ந்து பல கச்சேரிகள் செய்து குருவுக்கும் நிறைந்த புகழைச் சம்பாதித்துக் கொடுத்தார். குருவினால் சிஷ்யரும், சிஷ்யரால் குருவும் சிறப்புற்று விளங்கினார்கள்.

பிற்காலத்தில் வைத்தியநாதய்யரவர்கள் கச்சேரி செய்யும் பொழுது, பிடிலில் மகா வித்துவானுக இருந்த இலுப்பூர் பொன்னுசாமி பிள்ளை பிடிலும், மான்பூண்டியா பிள்ளை கஞ்சிராவும், தக்ஷிணுமூர்த்தி பிள்ளை மிருதங்கமும், பழனி கிருஷ்ணய்யர் கடமும் வாசிப்பது வழக்கம். இலுப்பூர் பொன்னுசாமி பிள்ளை லயத்தில் அபாரமாக சாதகம் செய்த வித்வான். மான்பூண்டியா பிள்ளையே அவரை ''எம்டன்'' என்று அழைப்பது வழக்கம். இத்தகைய பக்க வாத்தியங்களுடன் வைத்தியநாதய்யர் கச்சேரி செய்யும் பொழுது கேட்பவர்கள் பிரமிக்கத் தகுந்த லய வின்யாஸங்கள் பல நடைபெறும். அரையெடுப்பு, கால் எடுப்பு என்று ஒருவரோடொருவர் போட்டியிடுவதும், பல்லவிகளை முடிப்பதும் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஒரு சமயம் வைத்தியநாதய்யர் அவர்கள் ''ஸ்ரீ சுப்ரமண்யாய நமஸ்தே'' என்ற கிருதியைப் பாடுகையில் ''பூஸ-ராதி'' என்ற சரணத்தின் அடியை வைத்துக் கொண்டே விசித்திரமாக ஸ்வரம் பாடவும், பொன்னுசாமி பிள்ளை அதற்கு அனுஸரணையாக வாசிக்க, மான்பூண்டியா பிள்ளை தாளத்தை முடிக்கும் இடம் தெரியாமல் விழித்ததாகவும் சொல்லுவார்கள்.

ஆரம்பகாலத்தில் வைத்தியநாதய்யரின் ஸங்கீதத்தில் லய சம்பந்தமான வின்யாஸங்கள் சற்று அதிகமாகவே காணப்பட்டு, அதற்குத் தகுந்தாற் போல் சங்கீதபாகம் குறைந்தே இருந்து வந்தது. பழைய பக்க வாத்தியக்காரர்களில் சிலர் வயது சென்றதினுல் வாசிக்க முடியாமல் போகவே, அவர் திருக்கோடிக்காவல் கிருஷ்ணைய்யர், அழகநம்பி பிள்ளை முதலிய வித்வான்களுடன் கச்சேரி செய்து வந்தார்.

கிருஷ்ணையர் பிடிலில் தலைசிறந்த வித்வானுக விளங்கியவர். ஆயினும் அவரது சாதகம் ஸங்கீதத்தைப் பிராதான்யமாக உடையதாகையால் வைத்தியநாதய்யரின் தாள வியவஹாரமான வழியைப் பின்பற்றுவதில் அவருக்கு சிரமம் தோன்றுவதுண்டு. ஒரு முறை திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆதரவில் வைத்தியநாதய்யரும் கிருஷ்ணையரும் சேர்ந்து கச்சேரி செய்ய நேர்ந்தது. அப்பொழுது ஆதீனத்தின் தலைவராக விளங்கியவர் மகா ரசிகரும் அறிவாளியுமாகிய அம்பலவாண தேசிகராவர். அவர் பல துறைகளில் வல்லவர். ஸங்கீதத்தில் நுணுக்கமான ஞானம் கொண்டவர். வழக்கம் போல் கச்சேரி நடந்த பிறகு கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யரவர்கள் புறப்பட்டுச் சென்றதும், மடத்திலேயே தங்கியிருந்த கிருஷ்ணையரைப் பார்த்து ஆதீனத் தலைவர் ''கச்சேரி எவ்விதம் இருந்தது?'' என்று கேட்டார். சிறு பையனுக இருந்த நானும் அச்சமயம் அங்கு இருக்க நேரிட்டது. ஆதீனத் தலைவர் தம் மனத்தில் ஏதோ அபிப்பிராயத்தை வைத்துக் கொண்டு அவ்விதம் கேட்டது போல் தோன்றிற்று. கிருஷ்ணையர் பேச்சில் வல்லவராதலால் ''சங்கீதம் குறைவாகவும் தாளம் அதிகமாயும் இருந்தது'' என்று பொருள்பட ''அன்னம் குறைவாகவும், ஊறுகாய் நிறையவும் இருந்தது'' என்று கூறினுர்.

பண்டார ஸந்நிதிகளும் அதை ஆமோதித்து, ''ஆம் அவ்விதமே இருந்தது'' என்று கூறினுர். இந்த விருத்தாந்தம் எப்படியோ வைத்தியநாதய்யரின் காதுக்கு எட்டி விட்டது. சிறந்த அறிவாளியாகிய அவர் ஸங்கீதத்தில் வல்லவர்களாகிய இருவர் இவ்வாறு உரைத்ததைக் கேட்டு வருந்தினுர். தம் ஸங்கீதத்தில் இருந்து வந்த குறைபாடு அவர்களுக்கு விளங்கியது. அன்று முதல் அவர் உபரியான தாள வித்தைகளை குறைத்துக் கொண்டு நிஜஸங்கீத மார்க்கத்தில் உழைக்கலானுர். சுமார் ஐந்தாறு வருஷங்களுக்குள் அவர் ஸங்கீதமே மாறுதலடைந்து ராக ரஸ ப்ராதான்யத்தை உடையதாக ஆயிற்று. பின்னெரு முறை அவர் தம் ''கச்சேரி எப்படியிருந்தது'' என்று திருக்கோடிக்காவல் கிருஷ்ணையரைக் கேட்க, அவர் ''வைத்தா, இன்றுதான் நீ பாடியது நிஜஸங்கீதமாக இருந்தது. கச்சேரி என்றுல் இப்படித்தான் இருக்கவேண்டும்'' என்று பாராட்டினுர்.

வைத்தியநாதய்யரின் சாரீம் சற்றுக் கட்டையாகவே இருக்கும். கச்சேரியை ஆரம்பித்து சுமார் ஒரு மணிநேரத்துக்குப் பிறகே அது சூடேறி காதுக்கு ரஞ்சமாக ஆவது வழக்கம். ஆகவே அவர் கச்சேரிகளுக்குச் செல்லுமுன், ஓர் அறையில் உட்கார்ந்து சுமார் ஒரு மணி நேரம் சாதகம் செய்வார். சூடேறிய பிறகு அவரது சாரீரம் மிகுந்த விறுவிறுப்புடன் பேசும். ஐந்து அல்லது ஆறு மணிநேரம் கச்சேரி செய்வார். எத்தகைய பெரிய சபையாக இருந்தாலும் எல்லோருக்கும் தெளிவாகக் கேட்கக் கூடிய கனத்த சாரீரம். ஆரம்ப முதல்

முடிவு வரை அலுப்பில்லாமல் இருக்கும். இவ்வளவு நீண்டகாலம் கச்சேரி செய்பவர்கள் இக்காலத்தில் யாரும் இல்லை.

அய்யரவர்கள் துல்லியமான ராகஞானம் படைத்தவர். ராக ஆலாபனங்கள் கம்பீரமாயும் கர்நாடக சுத்தமாகவும், ராகச்சாயை கெடாமலும் இருக்கும். கீர்த்தனங்களின் பாடாந்தரம் பிராசீன ஸம்பிரதாயத்தை ஒட்டியதாகவே இருக்கும். ராகம், தானம், பல்லவி பாடுவதில் இவர் விசேஷ கியாதி பெற்று விளங்கினார். பல்லவிக்காக எடுத்துக் கொள்ளும் ராகத்தை விஸ்தாரமாகவும், நிதானமாகவும் மூன்று ஸ்தாயிகளிலும் பாடுவார். சிற்சில சமயங்களில் ராகமும், பல்லவியுமே ஒன்று முதல் ஒன்றரை மணி வரை நடைபெறும்.

தானம் பாடிய பிறகு நாலு களை அல்லது எட்டுக்களை சவுக்கத்தில் பல்லவி ஒன்று அமைத்துக் கொண்டு சிறந்த லய கற்பனைகளுடன் விதரணையாகப் பாடுவார். இவை பின் வரும் வித்வான்களுக்கு ஒரு வழி காட்டி போல் அமையும். பல்லவிக்கு முன் பெரிய கீர்த்தனங்களாக நான்கு அல்லது ஐந்து கிருதிகள் பாடுவார். பல்லவிக்குப் பின் தாயுமானவர் பாடல், திருப்புகழ், காவடிச் சிந்து, தில்லானா முதலியவற்றைப் பொழிவார். அக்காலத்தில் ரஸிகர்கள் ''கேட்டால் வைத்தா கச்சேரி தான் கேட்க வேண்டும்'' என்று கூறுவார்கள். ''மரத்துரை வைத்தா'' என்று அழைக்கப்பட்டு வந்த இவர் பிற்காலத்தில் ''கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், ''வைத்தியநாதய்யர் அவர்கள்'' என்றும் மரியாதையாகக் குறிப்பிடப்பட்டார். சுமார் 15 வருஷகாலம் தென்னிந்தியாவில் மிகவும் பிரசித்தி பெற்று பற்பலவிடங்களில் கச்சேரி செய்து புகழ் பெற்றார்.

இத்தகைய மகா வித்வான் ஒருவரோடு சம காலத்தில் பழகவும் அவர் காலத்திலேயே கச்சேரி செய்யவும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. ஒரு முறை நாகப்பட்டணத்தில் அவர் கச்சேரி செய்த மறுதினம் நான் செய்த கச்சேரியில் அவர் தலைமை வகித்து என்னை வெகுவாக புகழ்ந்து ஆசீர்வதித்தார். அக் காலத்தில் சிறு பையனாகவிருந்த எனக்கு அது மிகவும் பெருமை தந்தது.

பல வருஷங்கள் புகழுடன் விளங்கி, இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டு கச்சேரி செய்ய அசக்தரானார். அக் காலத்திலும் நான் சில முறை சென்று அவரைக் கண்டிருக்கிறேன். கடைசியாக 1920-ம் வருஷத்தில் சங்கீத உலகத்தின் துரதிர்ஷ்ட வசமாக அவர் நாதப் பிரஹ்மத்தின் திருவடியை அடைந்தார். அப்பொழுது அவருக்கு வயது 42.

பாரத நாட்டின் கலைகளில் பல க்ஷீணமடைந்திருக்கும் இக்காலத்திலும் கர்நாடக ஸங்கீதம் மிக உயர்ந்த நிலையில் இருந்து வருவதற்கும் கோனேரிராஜபுரம் போன்ற வித்வான்களே காரணம். பலவிதக் கஷ்டங்களுக்கிடையே உழைத்து, சாதகம் செய்து, கலைக்குத் தொண்டு புரிந்தார்கள். அவர்களின் வழியைப் பின் பற்றி கர்நாடக சங்கீதத்தின் தூய்மையைப் பாதுகாப்பதே நாம் அவர்களுக்குச் செய்யக் கூடிய கைம்மாறாகும். ♥

